The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, I still see none. In the Committee which conducts the means test, the District Judge may not sit. Only the Counselling Committee conducts the means test and gives advice about the case. The District Judge presides over the District Committee and he is not going to be interested in any particular matter or litigant and in seeing whether X or Y brief is entrusted to A or B advocate.

Naxalites.

* 157 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Law be pleased to state the number of prisoners belonging to Naxalite movement in the Jails of Tamil Nadu as on 8th September 1977?

நக்ஸல்பாரிகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

8—9—1977 ஆம் நாளன்றுள்ளபடி, தமிழ்நாட்டு சிறைச்சாலைகளில் நக்ஸல்பாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Thirty-one.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நக்சலைட் என்று எப்படி அரசாங்கம் முடிவெடுக்கிறது? ஒரு குற்றவாளி நக்சலைட் என்று எந்த ஆதாரத்தின்மீது பெயர் கொடுக்கப்படுகிறது? முப்பத்தொன்று நக்சலைட் கைதிகளும் குறிப்பிட்ட குற்றங்களுக்காக தண்டனை பெற்றார்களா? வேறு அரசியல் நோக்கத்திற்காக முன்கூட்டியே கைது செய்யப்பட்டார்களா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: The hon. Member has characterised this as 'Naxalite movement' and so, I think that the hon. Member must be knowing why they are called 'Naxalites'. The hon. Member may please look into his question.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இன்னும் கொஞ்சம் விவரமாகச் சொன்னால் நாட்டுக்கு நல்லது என்று கருதுகிறேன். 'எக்ஸ்ட்ரீம்' கம்யூனிஸ்ட்க்கு நக்சலைட் என்ற பெயர் கொடுக்கப்படுகிறது. மத்திய சென்னைச் சிறைச்சாலையில் நாங்கள் இருக்கும்போது, பலர் அதைத் தான் சொன்னார்கள். நல்ல இளைஞர்கள், சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரியில் படிக்கிறவர்கள் அங்கே அடைக்கப்பட்டிருந்தார்கள். பொதுவாக அவர்களை நக்சலைட்டுகள் என்று கொண்டு வந்து அடைத்திருப்பதாகச் சொன்னார்கள். வேண்டு

[1978 மார்ச் 1

மென்றே போலீசாருக்கும், அரசாங்கத்திற்கும் வேண்டாதவர்களைக் கொண்டு வந்து அப்படி வைத்திருக்கிறார்களா? ஏதாவது ஆதாரத்தோடு கைது செய்து வழக்குப் பதிவு செய்து நக்சலைட்டுகளைக் கைது செய்கிறார்களா?

(முற்பகல் 10-40)

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, if the police has mis-named any person and has falsely labelled any person as 'Naxalite', the matter may be brought to the notice of the Government and certainly the Government will look into that.

திரு. எம். சங்கரலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது நக்சல் பாரி என்று 31 கைதிகள் இருப்பதில் எத்தனை பேர் பட்டதாரிகள்? எத்தனை பேர் 30 வயதுக்குள்ளாக உள்ளவர்கள்? அவர்கள் எத்தனை வருஷங்களுக்கு மேலாக இருந்து வருகிறார்கள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I do not have these particulars. A separate question may be put.

திரு. ஆ. பாலசுப்பிரமணியம்: தமிழ் நாட்டில் சிறைச்சாலையில் இருக்கிற நக்சலைட்டுகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது இல்லாமல் இப்போது தமிழகத்தில் இந்த நக்சல்பாரி இயக்கம் இருக்கிறதா? அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, actually this does not arise from the principal question.

திரு. எம். சங்கரலிங்கம்: நக்சல்பாரிகளாக இப்போது இருக்கிறவர் களுடைய குடும்பத்திலிருந்து, வேண்டுமென்றே அவர்களுடைய வேலை கெடுக்கப்பட்டதால் வேறு விரோதப்போக்கினால் தீவிரமான நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்றும் வேண்டுமென்றே கைது செய்யப்பட்டு சிறையில் வைத்திருக்கிறார்கள் என்றும் அரசுக்கு மனு வந்திருக்கிறதா? அதுபற்றிப் பரிசிலனை செய்யப்பட்டதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, the Government have no such information at present.

திரு. எல். பலராமன்: இந்த நக்சல்பாரி இயக்கம் எந்த மாவட்டத்தில் தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கிறது? கைது செய்யப்பட்டவர்கள் 31 பேர் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்? இந்த இயக்கம் தீவிரமாக இருக்கிற மாவட்டங்களில் அவர்களைத் திருத்தவும் நல்லமுறையில் நடத்தவும் ஆலோசனை கூற அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I do not have the material particulars relating to the various questions of the hon. Member. I have got only this break-up.

At Vellore, there is one;

At Central Prison, there are six.

THIRU A. R. DAMODARAN: I think the hon. Member asked about the origin of the movement.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I have no material. Anyhow, this does not arise from the main question.

திரு. எஸ். முத்து: இந்த நக்சல்பாரிகள் 31 பேரும் எந்தக் காலத்தில் கைது செய்யப்பட்டார்கள்? அதற்கான விவரம் சொல்ல முடியுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, a separate question may be put. In fact, after 8th September 1977 one person arrested under the MISA and another Naxalite prisoner were released. So, as on 14th December 1977, the number is only 29.

Language Problem.

* 158 Q.—THIRU ARCOT N. VEERASWAMI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any letter was received by the Hon. the Chief Minister of Tamil Nadu from the Hon. the Prime Minister of India regarding the language problem, during the end of July, 1977; and

(b) if so, the details thereof?

மொழிப் பிரச்சினை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-ஆம் ஆண்டு ஜூலை இறுதியில் மொழிப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமரிடமிருந்து தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஏதாவது கடிதம் வந்ததா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரம் யாது?